தமிழ்நாடு அரசு

# பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை,

மண்டலப்புள்ளிஇயல் அலுவலகம், சேலம் – 636 302.

ந.க.எண்: 492/இ2/2023 நாள்: 21.03.2023

# வேலை வாய்ப்பு அறிக்கை

சேலம் மாவட்டம், சேலம் மண்டலப்புள்ளிஇயல் இணை இயக்குநர் அலுவலகத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பதவிக்கு கீழே குறிப்பிட்ட இனச் சுழற்சி முறை அடிப்படையில் நேரடி பணி நியமனம் செய்யப்படவுள்ளது. எனவே மாவட்டத்திற்குட்பட்ட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | அலுவலகம் | காலியிடம் | பதவியின் பெயர் | இனச்சுழற்சி முறை | அடிப்படை ஊதியம் |
|---|---|---|---|---|---|
| 1. | மண்டலப் புள்ளிஇயல் இணை இயக்குநர் அலுவலகம், அண்ணா நகர் to திருப்பதிகவுண்டனூர் வழி, அய்யம்பெருமாப்பட்டி (அஞ்சல்), சேலம் – 636 302. | 1 | அலுவலக உதவியாளர் | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (முன்னுரிமை பெற்றவர்) | ரூ.15,700 – 58,100 (நிலை–1) |

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்வி தகுதி | : | அலுவலக உதவியாளர் – எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் (அதற்கான சான்றுடன்) |
| 2. | வயது (01.01.2023 அன்றை தேதியில்) | : | 1. பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (முன்னுரிமை பெற்றவர்கள்) – 18–க்கு மேல் 34 வயதுக்குள் இருத்தல் வேண்டும்.<br>2. மாற்றுத்திறனாளிகள் – கூடுதலாக 10 வருடங்கள்.<br>3. ஆதரவற்ற விதவை 18–க்கு மேல் 37 வயதுக்குள் இருத்தல் வேண்டும்.<br>4. முன்னாள் ராணுவத்தினர் – 53 வயதுக்குள் இருத்தல் வேண்டும். |
| 3. | தேர்வு முறை | : | நேர்காணல் |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் விண்ணப்பதாரரின் பெயர், தகப்பனார் பெயர், பிறந்த தேதி, வயது, கல்வித்தகுதி, சாதி, நிரந்தர முகவரி, தற்போதைய முகவரி, முன்னுரிமை சான்று, இருப்பிட சான்றிதழ் மற்றும் இரண்டு அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடமிருந்து நாளது தேதியில் பெறப்பட்ட நன்னடத்தை சான்றுகளுடன் இணைத்தும் விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென தனியாக விண்ணப்பங்களோ படிவங்களோ அங்கீகரிக்கப்படவில்லை. உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முன்னுரிமையற்றவர் விண்ணப்பித்தால் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டது.
2. விண்ணப்பங்கள் கீழ்காணும் முகவரிக்கு தபால் மூலமாக 06.04.2023 பிற்பகல் 5.45–க்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டது.
3. நேர்காணல் தேதி விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் தெரிவிக்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி**

**மண்டலப் புள்ளிஇயல் இணை இயக்குநர்,**
மண்டலப் புள்ளிஇயல் இணை இயக்குநர் அலுவலகம்,
அண்ணாநகர் to திருப்பதிகவுண்டனூர் வழி,
அய்யம்பெருமாப்பட்டி (அஞ்சல்), சேலம் – 636 302. தொலைபேசி எண்: 0427–2387110

வெளியீட்டு ஆணைஎண்:76 செ.ம.தொ.அ/சேலம்/நாள்:22.03.2023